மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: காங்கேயம், ஈரோடு பகுதியில் உற்பத்தியாகிற பாலை ஈரோடு டயரிக்கு சேர்த்து சென்னைக்குக் கொண்டு வருகிறோம். மேலும் அங்கே அதிக உற்பத்தி இருந்தால் அவற்றையும் வாங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகை கூட்டுறவு பாலை சென்னைக்கு அனுப்பிவந்தார்கள். இவர்கள் வாங்காததால் அங்கே ஆயிரக்கணக்கான லிட்டர் பாலை கொட்டிவிட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனிக் கேள்வி போடவும்.

THIRU K. M. SUBRAMANIAM : When this country, particularly, Tamil Nadu is facing shortage of milk and the per capita consumption is so low how can the Hon. Minister say that there is excess of milk? It may be that the price is so high that the poor people are not able to buy it. Can I have an explanation on this?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு பால் வாங்குகிற மக்கள் இருக்கிறார்களோ, அந்த அளவுக்குமேல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதிகமான மக்கள் வாங்க முன்வந்து தேவை அதிகப்படுகிற நோத்தில் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்தும்

சுதேசமித்திரன் பத்திரிகை மூடப்பட்டதும் அதனால் எற்பட்ட வேலையின்மையால் அவதியுறும் தொழிலாளர், செய்தியாளர் நிலை குறித்தும்.

MR. SPEAKER : Under Rule 42 of the Tamil Nadu Assembly Rules Thiru R. Ponnappa Nadar has given notice of a motion for the adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely :—

"The closure of the 'Swadesamitran' Press since November 10th 1971 and the consequent hardship of unemployment caused to several working journalists and other press workers."

Thirumathi T. N. Anandanayaki has also given notice of a similar motion.

I now call upon Thiru R. Ponnappa Nadar to explain briefly how it comes under an adjournment motion.

1971 டிசம்பர் 13]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு நவம்பர் 10-ஆம் தேதியில் இருந்து சுதேசமித்திரன் பத்திரிகை மூடப்பட்டது குறித்தும், அதனால் பாதிக்கப்பட்ட வொர்க்கிங் ஜெர்னலிஸ்டு, தொழிலாளர்கள் நிலைமை குறித்தும் விவாதிக்கவேண்டுமென்ற இந்த அவசர முக்கியமான கருத்தைப் பற்றிய தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன். திடீரென்று அந்தப் பத்திரிகை மூடப்பட்டது. அதன்காரணமாக வேலையிழந்த வொர்க்கிங் ஜெர்னலிஸ்டுகள் இன்றைய தினம் கஷ்டப் படுகிறார்கள். தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதுபோன்ற முக்கியமான நிறுவனங்கள் மூடப்படுவது சரியல்ல. அதை உடனடியாக திறக்க அரசாங்கம் உடனடியாக உதவி செய்து, ஊக்கம் அளிக்கவேண்டும் என்பதை வற்புறுத்த இந்தச் சந்தர்ப்பத்தில் விரும்புகிறேன். மூடப்பட்ட அந்த நிறுவனம் திறக்கப்படுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்த இந்த அவசரத் தீர்மானத்தைத் கொடுத்திருக்கிறேன். இதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் சுதேசமித்திரன் நிர்வாகத்தினர் பண நெருக்கடியால் தங்கள் தொழிலாளருக்கு உரிய காலத்தில் ஊதியம் கொடுக்க இயலவில்லை என்றும் தங்களுக்கு அவசியமான மானோ டைப் மிஷின் வாங்க முடிய

வில்லை என்றும் தங்களுக்குக் கடன் வசதி கிடைக்கும் வரை நிறுவன வேலையைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்று தொழிலாளர் நல ஆணையருக்கு முறையீடு செய்தனர்.

அதன்பேரில் 17—11—1971 அன்று ஆணையர் முன்னிலையில் நிர்வாகத்தினரும், சுதேசமித்திரன் தொழிலாளர் சங்கமும் சென்னை பத்திரிகையாளர் சங்கமும் பேச்சு வார்த்தை நடத்தி கீழ்க்கண்டவாறு உடன்பாடு ஏற்பட்டது—

1. அக்டோபர் மாத ஊதியம் 23-11-1971-க்குள் கொடுத்துவிட வேண்டும்.

2. பத்திரிகையை 18-11-1971 முதல் 22-12-1971 வரை நிறுத்தி வைக்க இருதரப்பினரும் இசைந்தனர்.

3. 1-11-1971 முதல் 17-11-1971 வரை முழுச் சம்பளமும் 18-11-1971 முதல் 22-12-1971 வரை 75 சதவிகிதம் சம்பளமும் கடன் கிடைத்த ஒரு வாரத்தில் கொடுக்கப்படும். மீதமான 25 சதவிகிதம் ஜூன் 1972-இல் கொடுக்கப்படும்.

4. இடைக் காலத்தில் காமிராவைத் தவிர வேறு சொத்துக்களை விற்கக் கூடாது.

5. கடன் கிடைக்காமல் நிறுவனத்தை முடிவிடும் நிலைமை ஏற்பட்டால் சட்டப்படி நோட்டீஸ் சம்பளமும் நஷ்டஈடும், கிராஜுடி தொகையும் 15 நாட்களுக்குள் கொடுக்கப்படும்.

6. இந்தக் கம்பெனியோ அல்லது இத்துடன் இணையும் வேறு கம்பெனியோ பத்திரிகை ஆரம்பித்தால் இன்றுள்ள தொழிலாளர் சம்பளத்திற்குக் குறையாமல் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 22-12-1971 க்குள் வங்கியிலிருந்து கடன் கிடைத்து வேலை ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : 22-11-1971 க்குள்ளாக கடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்குத் தேதி என்ன? கடன் கிடைத்ததா, இல்லையா? இல்லை என்றால் அரசாங்கமே கடன் கொடுத்து உதவ முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 22-12-1971 க்குள் கடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பதாகச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, அதற்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.

(3) அறிவிப்புகள்

(அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.